පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 79

ආයතනයේ නම : සීමා නිර්ණය කොමිෂන් සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளிப்படுத்துகைத் தொடர்: 79

நிறுவனத்தின் பெயர்: எல்லை நிருணய ஆணைக்குழு

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் தொடர்பான செயற் குழுவினால் சபையில் முன் வைக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) ன் கீழ் நிறுவனத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No : 79

Name of the Institution : Delimitation Commission

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on public Accounts in terms of Standing Order No. 119(4)

| மாதிரிப் படிவ இலக்கம் - 01 | |
|---|---|
| பாராளுமன்ற வெளிப்படுத்துகைத் தொடர் இலக்கம் - 79 | |
| நிறுவனத்தின் பெயர்: எல்லை நிருணய ஆணைக்குழு | |
| குழுவினால் இனம் காணப்பட்ட பலவீனங்கள் | பலவீனங்கள் / நிகழ்கால நிலைமையை அகற்றுவதற்காக நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
| உள்ளக கணக்காய்வு விசாரணைப் பதிவேடொன்று பேணப்படவில்லை | தற்போது உள்ளக கணக்காய்வு விசாரணை பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| ஆபத்து பதிவேடு இற்றைப் படுத்தப்படவில்லை | ஆபத்து பதிவேடு இற்றைப் படுத்தப்பட்டு பேணப்பட்ட வண்ணமுள்ளது. |
| நி.பி.134(2) ன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தை உசாவுகின்ற உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிரந்தர உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை பணியாட் குழுவில். இணைத்துக் கொள்ளுமளவுக்கு வருடாந்த வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு போதியதாக இல்லாமையினால் வேறொரு நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் ஊடாக உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்குள் கணக்காய்வுகள் மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டங்கள் முறையாக நடாத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டிற்குள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் கூட்டங்களை முறையாக நடாத்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன், |
| நிறுவனம் தொடர்பாக பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இணையத்தளமொன்றை உருவாக்கிப் பேணியிருக்கவில்லை. | நிறுவனம் தொடர்பாக பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான இணையத் தளமொன்று ஏற்கனவே உருவாக்கப்பட்டு |

| | |
|---|---|
| | செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது. அதன் முகவரி வருமாறு: http//delimitationcommission.blogspot.com வே. |
| நிறுவனத்தால் பேணப்பட்டு வருகின்ற இணையத்தளத்தின் ஊடாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகளை/ புகழுரைகளை குறிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் பேணப்பட்டு வருகின்ற இணையத்தளத்தின் ஊடாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகளை / புகழுரைகளைக் குறிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பணியாட் குழுவினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. . |
| 2018 சனவரி 24 ஆம் தேதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய, முறையாகத் தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டமொன்று காணப்படவில்லை. | 2018 சனவரி 24 ஆம் தேதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய, முறையாகத் தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டமொன்றை உருவாக்குவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. |
| தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டத்தின் ஊடாக பணியாட் குழுவினர்களில் 50% திற்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு வருடத்தில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ள மனிதவள திட்டத்தின் ஊடாக பணியாட் குழுவினர்களில் 50%துக்கு மேற்பட்டவர்களுக்கு வருடத்தில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சியை வழங்குவதற்கு தேவையான வாய்ப்புகள் இனம் காணப்பட்டுள்ள அதே வேளை, அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், கொள்ளளவு மற்றும் நிபுணத்துவ விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களளை செயலுருப்படுத்துவதற்குமென நிறுவனத்திற்குள் சிரேட்ட அலுவலர்கள் பெயர் குறிக்கப்படவில்லை. | ஏற்கனவே இதற்காக ஒரு சிரேட்ட அலுவலர் பெயர் குறிக்கப்பட்டுள்ளார். |
| நிறுவனத்தின் விடயப் பரப்புக்கு அமைய நிலையான குறிக்கோள்கள் இனம் காணப்படவில்லை. | அரசியலமைப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகளில் ஆணைக் குழுவின் பிரதான பணிகள் காட்டப்பட்டுள்ளன. பாராளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் மாவட்டங்களை எல்லை நிருணயம் செய்யும் பணிகள் குறிப்பாகக் கையளிக்கப்பட்டுள்ளன. இது தவிர வேறு பணிகள், தத்துவங்கள் என்பன அரசியலமைப்பில் குறிப்பீடு செய்யப்படவில்லை. |
| இனம் காணப்பட்ட நிலையான குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அணுகத்தக்க இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசியலமைப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகளில் ஆணைக் குழுவின் பிரதான பணிகள் காட்டப்பட்டுள்ளன. பாராளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் மாவட்டங்களை எல்லை நிருணயம் செய்யும் பணிகள் குறிப்பாகக் கையளிக்கப்பட்டுள்ளன. இது தவிர வேறு பணிகள், தத்துவங்கள் என்பன அரசியலமைப்பில் குறிப்பீடு செய்யப்படவில்லை. |
| இனம் காணப்பட்ட நிலையான குறிக்கோள்களின் அமுலாக்கத்தின் முன்னேற்றங்களை அளவிடுவதற்கான | அரசியலமைப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகளில் ஆணைக் குழுவின் பிரதான |

| | |
|---|---|
| சுட்டிகள் நிருணயிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிகள் காட்டப்பட்டுள்ளன. பாராளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் மாவட்டங்களை எல்லை நிருணயம் செய்யும் பணிகள் குறிப்பாகக் கையளிக்கப்பட்டுள்ளன. இது தவிர வேறு பணிகள், தத்துவங்கள் என்பன அரசியலமைப்பில் குறிப்பீடு செய்யப்படவில்லை. |
| திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் ஊடாக வழங்கப்பட்டிருந்த பயிற்சிகளின் அளவு 50% அளவில் குறைமட்டத்தில் காணப்பட்டது. | வரையறுக்கப்பட்ட பணியாட் குழுவினர்கள் மாத்திரம் நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இதற்கு முன்பு பணியாற்றிய நிலையங்களில் தேவையான பயிற்சித் தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தியிருப்பதோடு, எதிர்காலத்தின் தேவைப்பாடுகளுக்கமைய, பயிற்சிகளுக்காக உரிய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் செயலுருப்படுத்தப்படவில்லை. | தற்போது உரிய பரிந்துரைகள் செயலுருப்படுத்தப்பட்டுள்ளன.. |

| | |
|---|---|
| 2020.08.28 ஆம் தேதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிறுவனத்தினால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் தெளிவாகத் தெரியத் தக்க விதத்தில் அதன் முன்னேற்றங்களை அளவிடத் தகு செயலாற்றுகை சுட்டிகள் மூன்றை இனம் கண்டு கொண்டிருக்கவில்லை. . | பணிப் பொறுப்புகள் தெளிவாகத் தெரியத் தக்க விதத்தில் அதன் முன்னேற்றத்தை அளவிடத்தகு செயலாற்றுகை சுட்டிகள் மூன்று இனம் காணப்பட்டு அதற்கமைய செயலுருப்படுத்தப்பட்டு வருகின்றது. |

பி.பீ.சி.குலரத்ன,
செயலாளர் ( பதிற் கடமை)
எல்லை நிருணய ஆணைக்குழு